# மத்துகம கல்வி வலயம்

## இரண்டாந் தவணை கணிப்பீடு – 2023

| தரம் - 11 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | பகுதி – I | நேரம் -1 மணி |
|---|---|---|---|

பெயர் /வகுப்பு /சுட்டெண்:.......................................................................................

கவனிக் வேண்டியது

- சகல வினாக்களுக்கும் விடை எழுதுக.
- இல1 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு (1), (2), (3), (4) எனக்குறிப்பிட்டுள்ள விடைகளுள் பொருத்தமான அல்லது மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அடையாளமிடுக.
  (1 வினாக்கு 1 புள்ளி வீதம் 40 புள்ளிகள்)

கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து 01 தொடக்கம் 05 வரையான கேள்விகளுக்கு விடையளிக்குக.

உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய உணவுப்பாவனையால் ஏற்படக்கூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுடைய பொலன்னறுவையைச் சேர்ந்த பியதாச என்பவர் தமது பிரதேசத்தில் காய்கறிகளையும் பழங்களையும் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கான வியாபார நிலையமொன்றை ஆரம்பித்து, தமது வியாபார நிலையத்திற்கு ஊழியரொருவரையம் நியமித்துக் கொண்டார். கல் விகாரை புண்ணிய பூமிக்கு வருகை தருவோரிடம் இந்தப் புதிய காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு உயர்ந்த கேள்வி காணப்படுகிறது.

01. பியதாசவின் வியாபாரத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான மனிதத் தேவை எது?
    1. சுகாதாரம்
    2. காய்கறிகளும் பழங்களும்
    3. உணவு
    4. பாதுகாப்பு

02. காய்கறிகளும் பழங்களும் உள்ளடங்கும் உற்பத்திக் காரணி
    1. நிலம்
    2. உழைப்பு
    3. மூலதனம்
    4. முயற்சி

03. பியதாசவின் வியாபாரத்தின் ஒரு வாய்ப்பாக காணப்படுவது
    1. நாட்டில் பரவிவரும் நோய் நொடிகள் தொடர்பாக பியதாசவுக்கு விழிப்புணர்வு காணப்படுவது.
    2. புண்ணியபூமிக்கு வருகை தரும் பக்தர்களிடம் காய்கறி மற்றும் பழங்கள் தொடர்பாக காணப்படும் கேள்வி
    3. பியதாச பொலன்னறுவையில் வசிக்கின்றமை.
    4. காய்கறிகளையும் பழங்களையும் மட்டும் விற்பனை செய்தல்.

04. இந்த வியாபாரமானது
    1. ஒரு கூட்டுறவாகும்
    2. தனியுடைமை வியாபாரம்
    3. பங்குடமை
    4. கம்பனி

05. பியதாசவின் வியாபாரத்துடன் கொடுக்கல் வாங்களல் செய்வோரின் நோக்கமானது
    1. வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வது.
    2. குறிப்பிட்டளவு இலாபம் பெறல்
    3. புதிய காய்கறி, பழங்களை நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளல்.
    4. சுகாதார நலத்துடன் வாழ்தல்

06. வியாபாரிகளுக்கு சுயவிருப்பின் படி தமது வியாபார நடவடிக்கைகளை கொண்டு நடாத்துவதை மட்டுப்படுத்தும் புறச் சூழல் காரணி
    1. பொருளாதாரச் சூழல்
    2. ஆரசியல் சூழல்
    3. சட்டச் சூழல்
    4. தொழில்நுட்பச் சூழல்

07. சில்லறை வியாபாரத்தின் பண்பு ஆவது
    1. புதிய பொருட்களை அறிமுகப்படுத்துதல்
    2. தேவையான போது கடனுக்குப் பொருட்களை வழங்கல்
    3. வாடிக்கையாளரோடு நெருக்கமாதல்
    4. நுகர்வோரது கருத்துக்களை உற்பத்தியாளருக்கு அறிவித்தல்

08. சட்டரீதியன செயற்பாடுகளின் போது நிறுவனத்தின் அதிகாரி தனது பதவிப் பெயரில் பிரசன்னமாக வேண்டிய நிறுவன அமைப்பு
 1. தனிவியாபார அமைப்பு
 2. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
 3. அரச கூட்டுத்தாபனங்கள்
 4. அரச திணைக்களங்கள்

09. காசோலையொன்றின் காசோலை காந்த மையப்புலப் பகுதியொன்றில்(MICR) உள்ளடங்கும் இலக்கம் அல்லாதது.
 1. காசோலை இலக்கம்
 2. வங்கிக் கிளை இலக்கம்
 3. பட்டியல் இலக்கம்
 4. வங்கி நடைமுறைக் கணக்கிலக்கம்

10. காப்புறுதியுடன் தொடர்புபடும் பிரிவினர்களில் 1ம் பிரிவினர்
 1. காப்புறுதியைப் பெற்றுத்தரும் பிரிவினர்
 2. காப்புறுதியை வழங்கும் பிரிவினர்
 3. காப்புறுதி ஒப்பந்தத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய அனைத்துப் பிரிவினரும்
 4. மேலே குறிப்பிட்ட எவையும் அல்ல.

11. தொடர்பாடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் தொடர்பாடல் ஊடகம் அல்லாதது.
 1. இலத்திரனியல் 2. மின்அஞ்சல் 3. எழுத்து 4. சமிக்ஞைகளும் குறியீடுகளும்.

12. பொருத்தமான போக்குவரத்து ஊடகமொன்றைத் தெரிவுசெய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளைக் கொண்டிராதது
 1. கிரயம், கொள்ளளவு, கிடைப்பனவுத்தன்மை, வேகம்
 2. கொள்ளளவு, கிடைப்பனவுத்தன்மை , வேகம், பாதுகாப்பு
 3. கிடைப்பனவுத்தன்மை, வேகம், பாதுகாப்பு, பொருளின் தன்மை
 4. வேகம், பாதுகாப்பு, கொள்ளளவு, ஊடகத்திற்கான சக்தி

13. வீடுகளை நிர்மாணித்து சந்தைப்படுத்தும் வியாபாரமொன்றின் கீழ்வரும் ஒவ்வொரு சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான சரியன முகாமைத்துவ நடவடிக்கைகளின் ஒழுங்கு

A- நிர்மாண நடவடிக்கை மற்றும் சந்தைப்படுத்தும் செயற்பாட்டினைத் தீர்மாணித்தல்

B- திட்டமிட்டதற்கமைய தரமான வீடுகளை நிர்மாணித்துள்ளமை தொடர்பாக பரிசீலித்தல்

C- உற்பத்தி முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் என்போர் தமது சேவையாளர்களுக்குத் தேவையான தகவல் மற்றும் அறிவுருத்தல்களை வழங்குதல்

D- வியாபரத்தின் நிர்மாணம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாக முகாமையாளர்களை நியமித்தல்

 1. நெறிப்படுத்தல, கட்டுப்படுத்தல், ஒழுங்கமைத்தல், திட்டமிடல்.
 2. திட்டமிடல், கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல், ஒழுங்மைத்தல்.
 3. திட்டமிடல், கட்டுப்படுத்தல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல்.
 4. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல்.

14. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மனித வளங்களைப் பயன்படுத்துதல்
 1. வினைத்திறன்
 2. விளைதிறன்
 3. முகாமைத்துவம்
 4. திட்டமிடல்

15. சந்தைப்படுத்தல் கலவை மாறிகளுள் வணிகங்களுக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற மாறியாக இருப்பது
 1. உற்பத்திப் பொருள் 2. விலை 3. இடம் 4. மேம்படுத்தல்

16. HONDA கம்பனியானது சூரிய ஒளியை சேமித்த வைத்து சூரிய ஒளியில் ஓடக்கூடிய மோட்டார் வாகனமொன்றை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானித்தது. இந்த நடவடிக்கை தொடர்பான முகாமைத்துவ கருமங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் கலவை மாறி என்பவற்றை முறையே காட்டுவது.
 1. திட்டமிடல் மற்றும் விலை
 2. திட்டமிடல் மற்றும் உற்பத்திப் பொருள்
 3. ஒழுங்கமைத்தல் மற்றும் உற்பத்திப் பொருள்
 4. ஒழுங்கமைத்தல் மற்றும் விலை

17. “அதிகரித்தல் வரவு”, “குறைதல் செலவு” என்ற இரட்டைப் பதிவுத்தத்துவத்திற்கமைய பொருத்தமான கணக்குச் சோடி.
   1. தரகுச் செலவுக் கணக்கு, தரகு வருமானக் கணக்கு
   2. கட்டடக் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு
   3. பற்றுக் கணக்கு, காசுக் கணக்கு
   4. கொள்வனவுக் கணக்கு, வட்டி, வருமானக் கணக்கு

18. வணிகத்தின் பற்றுக் கணக்கு உள்ளடங்கும் கணக்கு வகை
   1. சொத்துக் கணக்கு   2. செலவுக் கணக்கு   3. பொறுப்புக் கணக்கு   4. உரிமைக் கணக்கு

கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 19 தொடக்கம் 21 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A- உரிமையாளர் ரூ 300 000 மூலதனமாக ஈடுபடுத்தினார்.
B- கடனுக்கு இருப்புக் கொள்வனவு ரூ. 60 000
C- உரிமையாளரால் பொருள் பற்றப்பட்டது ரூ. 5 000
D- உரிமையாளரின் மின்சாரக் கட்டணம் ரூ. 3000 வணிகத்தின் பணத்தினால் செலுத்தப்பட்டது.
E- ரூ. 30 000 கிரயமான இருப்புக்கள் ரூ. 50 000 க்கு கடனுக்கு விற்கப்பட்டது.

19. மேற்கூறிய கொடுக்கல் வாங்கலின் பின்னரான அடிப்படை கணக்கீட்டுச் சமன்பாடு (சொத்து =உரிமை + பொறுப்பு)
   1. 377 000 =317 000 + 60 000   2. 372 000 =312 000 + 60 000
   3. 402 000 =342 000 + 60 000   4. 372 000 =300 000 + 72 000

20. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களில் வணிகத்தின் உரிமையில் அதிகரிப்பை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்
   1. C யும் E யும்   2. A யும் D யும்   3. B யும் C யும்   4. A யும் E யும்

21. மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களின் பின் (A,B,C,D மற்றும் E கொடுக்கல் வாங்கல்களின் பின்) உரிமையாளர் தனது சொந்த நிதியிலிருந்து கடன் கொடுத்தோருக்கு ரூ. 50 000 செலுத்துவாராயின் வணிகத்தின் இறுதியான கணக்கீட்டுச் சமன்பாடு.
   1. 322 000 =312 000 + 10 000   2. 372 000 =312 000 + 60 000
   3. 372 000 =362 000 + 10 000   4. 322 000 =212 000 + 110 000

22. மோட்டார் வாகன விற்பனையில் ஈடுபடும் மோட்டார் வாகன இறக்குமதி கம்பனி (Vehicle Import company) தனது அலுவலகப் பாவணைக்காக இந்திரா ஸ்டோஸிடம் ரூ 5 000 000 க்கு மோட்டார் வாகனமொன்றைக் காசுக்கு வாங்கியது. இந்தக் கொடுக்கல் வாங்கலானது மோட்டார் வாகன இறக்குமதி கம்பனியின் ஏடுகளில் பதியப்படும் முறை (இரட்டைப் பதிவு)

| | | | |
|---|---|---|---|
| 1. கொள்வனவுக் கணக்கு | வரவு | ரூ 5 000 000 | |
| காசுக் கணக்கு | செலவு | | ரூ 5 000 000 |
| 2. மோட்டார் வாகன கணக்கு | வரவு | ரூ 5 000 000 | |
| காசுக் கணக்கு | செலவு | | ரூ 5 000 000 |
| 3. காசுக் கணக்கு | வரவு | ரூ 5 000 000 | |
| விற்பனைக் கணக்கு | செலவு | | ரூ 5 000 000 |
| 4. மோட்டார் வாகனக் கணக்கு | வரவு | ரூ 5 000 000 | |
| இந்திரா ட்ரேடர்ஸ் கணக்கு | செலவு | | ரூ 5 000 000 |

23. கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ 25 000 பெறுமதியான காசோலையொன்றை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்ததன் பின் மறுக்கப்பட்டுள்ளது. மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமானத்தைப் பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவு

| | | | |
|---|---|---|---|
| 1. வங்கிக் கணக்கு | வரவு | ரூ 25 000 | |
| கடன்பட்டோர் கணக்கு | செலவு | | ரூ 25 000 |
| 2. வங்கிக் கணக்கு | வரவு | ரூ 25 000 | |
| காசுக் கணக்கு | செலவு | | ரூ 25 000 |
| 3. கடன்பட்டோர் கணக்கு | வரவு | ரூ 25 000 | |
| வங்கிக் கணக்கு | செலவு | | ரூ 25 000 |
| 4. காசுக் கணக்கு | வரவு | ரூ 25 000 | |
| வங்கிக் கணக்கு | செலவு | | ரூ 25 000 |

24. வணிகத்தின் காசேட்டின் வரவுப் பக்கத்தின் வரவு பக்க கழிவு நிரலின் கூட்டுத்தொகை பொருத்தமான கணக்கில் பதிவு செய்வதற்கான இரட்டைப் பதிவுத் தத்துவம்
    1. செலவு அதிகரித்தல் வரவு
    2. வருமானம் அதிகரித்தல் செலவு
    3. செலவு குறைதல் வரவு
    4. உரிமை குறைதல் வரவு

25. பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லாதது
    1. சிராக்கல் பதிவுகள் (திருத்தும் பதிவுகள்)
    2. காசுப் பற்று
    3. பொருள் பற்று
    4. நடைமுறையல்லா சொத்துக்களை கடனுக்குக் கொள்வனவு செய்தல்

26. சில்லறைக் காசேட்டின் பேரேட்டுக் கணக்கு நிரலில் உள்ளடங்கும் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்ட சரியான விடை
    1. உள்வந்த வண்டிக் கூலி, போக்குவரத்துச் செலவு, கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு
    2. கடன் கொடுத்தோருக்கான கொடுப்பனவு, உள்வந்த வண்டிக்கூலி, சிறிய பெறுமதியுடைய சொத்துக்காளை காசுக்கு கொள்வனவு செய்தல்
    3. உள்வந்த வண்டிக் கூலி, முச்சக்கரவண்டிச் செலவு, சிறிய பெறுமதியுடைய சொத்துக்களைக் காசுக்குக் கொள்வனவு செய்தல்
    4. சிறிய பெறுமதியைக் கொண்ட சொத்துக்களைக் காசுக்குக் கொள்வனவு செய்தல், உள்வந்த வண்டிக் கூலி, சுத்தப்படுத்தல் செலவு

27. வணிகத்தின் 2023.09.1ம் திகதி சில்லறைக் காசு மீதி ரூ 400 ஆகும். செப்டெம்பர் மாதத்தின் சில்லறைச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூ 9200, 2023.09.30 ல் சில்லறைக் காசு மீதி ரூ 800 2023. ஆகஸ்ட் மாதம் சில்லறைச் செலவுகளின் மொத்தம் எவ்வளவு?
    1. ரூ. 8800
    2. ரூ. 9200
    3. ரூ. 9600
    4. ரூ. 10000

28. வணிகமொன்றினால் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கு 2023.09.30ம் திகதி செலவு மீதியொன்றைக் காட்டியது. அது
    1. சொத்து
    2. செலவு
    3. பொறுப்பு
    4. ஊரிமை

❖ வங்கி நடைமுறைக் கணக்கொன்றை வைத்திருக்கும் குமாரி என்பவருக்கு ரூ. 45000 வரை வங்கி மேலதிகப் பற்று வசதியை பெற்றுக் கொள்ளும் வசதியை அவரது வணிக வங்கி வழங்கியுள்ளது. அவரது வங்கிக் கணக்கின் மீதி ரூ. 18000 ஆக இருக்கும் போது குமாரியால் எழுதப்பட்ட காசோலைக்கு ரூ 30000 வங்கியால் வழங்கப்பட்டுள்ளதோடு, அவரது நிலையான கட்டளைக் கொடுப்பனவுக்கு வங்கி வழங்கிய வங்கிக் கடன் ரூ 20000 ஆகும்.

29. குமாரி பெற்றுக்கொண்ட வங்கி மேலதிப்பற்றின் பெறுமதி
    1. ரூ. 30000
    2. ரூ. 20000
    3. ரூ. 32000
    4. ரூ. 45000

30. நிலையான கட்டளைக்கமைய வங்கி செலுத்திய வங்கிக் கடனைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு
    1. வங்கிக் கணக்கு வரவு ரூ 20 000<br>வங்கிக் கடன் கணக்கு செலவு ரூ 20 000
    2. வங்கிக் கடன் கணக்கு வரவு ரூ 20 000<br>வங்கிக் கணக்கு செலவு ரூ 20 000
    3. வங்கிக் கடன் கணக்கு வரவு ரூ 20 000<br>காசுக் கணக்கு செலவு ரூ 20 000
    4. காசுக் கணக்கு வரவு ரூ 20 000<br>வங்கிக் கணக்கு செலவு ரூ 20 000

31. வணிகமொன்று குறித்த விலை ரூ. 160 000 உடைய பொருளொன்று கடனுக்கு விற்பனை செய்யும் போது ரூ. 10000 வியாபாரக் கழிவொன்ற பெற்றுக்கொடுத்ததுடன் 10% காசுக் கழிவையும் அனுமதித்தது. வணிகத்தின் புத்தகங்களின் கணக்குகளில் உள்ளடக்கப்படவேண்டிய மொத்தக் கழிவு யாது?
    1. ரூ. 26000
    2. ரூ. 25000
    3. ரூ. 15000
    4. ரூ. 10000

32. கொள்வனவுப் பட்டியலொன்றின் குறிப்பிட்ட நிபந்தனை "5/30/ தேறிய 60" என்பதன் கருத்து
   1. 60 நாட்களுக்குள் கடன் செலுத்தப்பட வேண்டும். 30 நாட்களுக்குள் கடன் செலுத்தப்படின் 5%காசுக் கழிவு வழங்கப்படும்
   2. 30 நாட்களுக்குள் கடன் செலுத்தப்பட வேண்டும். 60 நாட்களுக்குள் கடன் செலுத்தப்படின் 5%காசுக் கழிவு வழங்கப்படும்
   3. 5% காசுக் கழிவைப் பெற்றுக்கொள்வதற்கு 30-60 நாட்களுக்குள் கடன் தீர்க்கப்பட வேண்டும். கழிவு வழங்கப்படும்
   4. தேறிய விற்பனைகளில் 60,30 நாட்களுக்குள் தீர்க்கப்படின் 5% காசுக் கழிவு வழங்கப்படும்.

33. பரீட்சை மீதியின் வரவு நிரலுக்கு உட்படும் கணக்குகளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
   1. மோட்டார் வாகன பெறுமானத் தேய்வுக் கணக்கு, மோட்டார் வாகன பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு, வங்கி மேலதிகப்பற்று
   2. தளபாட கணக்கு, தளபாடப் பெறுமானத் தேய்வு கணக்கு, பெற்றகழிவுக் கணக்கு
   3. வங்கி கடன் கணக்கு, வங்கிக் கடன் வட்டிக்கணக்கு, கட்டிட பெறுமானத் தேய்வுக் கணக்கு
   4. கடன்பட்டோர் கணக்கு, கொள்வனவு கணக்கு, வங்கி மேலதிகப்பற்று வட்டி கணக்கு

34. தொங்கல் கணக்கு தொடர்பான பிழையான கூற்று
   1. பிழைகளைத் திருத்திய பின் தொங்கல் கணக்கின் மீதி மறைந்துவிடும்
   2. பரீட்சை மீதியின் கூட்டுத்தொகை அதிகமாக உள்ள பக்கத்தில் தொங்கல் கணக்கு உருவாகும்
   3. பரீட்சை மீதியினால் வெளிக்காட்டப்படும் பிழைகளைத் திருத்தும் போது ஒரு பதிவு தொங்கல் கணக்கில் இடம்பெறும்.
   4. பரீட்சை மீதியின் வரவு செலவுப் பக்கங்களின் கூட்டுத்தொகைகள் வேறுபடும் போது அதனை தற்காலிகமாக சமப்படுத்துவகற்கே தொங்கல் கணக்கு உருவாகின்றது.

35. பெற்ற வட்டிக் கணக்கின் மீதி ரூ 20000 பரீட்சை மீதியின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்தமைக்கான பிழையைத் திருத்துவதற்கான நாட்குறிப்போட்டுப் பதிவு
   1. தொங்கள் கணக்கு வரவு ரூ 20 000
      பெற்றவட்டிக் கணக்கு செலவு ரூ 20 000
   2. காசுக் கணக்கு வரவு ரூ 20 000
      பெற்றவட்டிக் கணக்கு செலவு ரூ 20 000
   3. பெற்ற வட்டிக் கணக்கு செலவு ரூ 40 000
   4. தொங்கள் கணக்கு வரவு ரூ 40 000

வினா இலக்கம் 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்வரும் கபவல்களை பயன்படுத்தவும்.

2020.01.01 அன்று ரன்தரு என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட வணிகத்தின் 2022.12.31 அன்று பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு.

| | ரூ | | ரூ |
|---|---|---|---|
| கொள்வனவு | 75 000 | வங்கிக் கடன் வட்டி | 5 000 |
| வெளிச்சென்ற வண்டிக் கூலி | 2 000 | வங்கிக் கடன் | 180 000 |
| ஏற்றி இறக்கல் கூலி | 5 000 | கடன் பட்டோர் | 25 000 |
| உட்சுமை கூலி | 3 000 | விற்பனை | 125 000 |
| கடன் கொடுத்தோர் | 15 000 | தரகு செலுத்தியது | 4 000 |
| பெற்ற கழிவு | 10 000 | காணி கட்டடம் | 400 000 |
| கொடுத்த கழிவு | 2 000 | மோட்டார் வாகனம் | 200 000 |
| மின் கட்டணம் | 4 000 | காசு | 7 000 |
| தரகு வருமானம் | 10 000 | மூலதன் (2022.01.01) | 400 000 |
| கடை வாடகை செலுத்தியது | 5 000 | பற்று | 3 000 |

வணிகத்தின் 2022.12.31 அன்று இறுதிஇருப்பின் பெறுமதி ரூ 15 000.

மேற்தரப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி வினா இலக்கம் 36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.

36. ரன்தரு வணிகத்தின் விற்பனைக்குத் தயாராக இருந்த பொருள்களின் கிரயம் யாது?
1. ரூ. 82000 2. ரூ. 85000 3. ரூ. 83000 4. ரூ. 98000

37. முறையே வணிகத்தின் விற்பனைக் கிரயம் மற்றும் மொத்த இலாபம் என்பவற்றைக் காட்டுவது
1. 67 000 மற்றும் 58 000 2. 68 000 மற்றும் 57 000
3. 83 000 மற்றும் 42 000 4. 83 000 மற்றும் 43 000

38. வணிகத்தின் நிர்வாகக் கிரயம் மற்றும் ஏனைய வருமானம் என்பவற்றை காட்டும் ஒழுங்கு
1. 9 000 மற்றும் 20 000 2. 9 000 மற்றும் 10 000
3. 4 000 மற்றும் 10 000 4. 4 000 மற்றும் 20 000

39. வணிகத்தின் 2022.12.31ல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம்
1. ரூ. 45 000 2. ரூ. 55 000 3. ரூ. 67 000 4. ரூ. 65 000

40. 2022.12.31 தினத்தில் வணிகத்தின் உரிமையாளரின் உரிமையாக அமைவது
1. ரூ. 442 000 2. ரூ. 455 000 3. ரூ. 452 000 4. ரூ. 400 000

# மத்துகம கல்வி வலயம்

## இரண்டாந் தவணை கணிப்பீடு – 2023

| தரம் - 11 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | பகுதி –II | நேரம் -2 மணி |
|---|---|---|---|

பெயர் /வகுப்பு /சுட்டெண்:……………………………………………………………………………

♦ முதலாம் வினாஉட்பட, பகுதி I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. முயற்சியாண்மை முகாமைத்துவம் சம்பந்தமான விஷேட பட்டம்பெற்ற ரஸிக என்பவர் கொங்ரீட் உற்பத்திகளை விநியோகம் செய்வதற்காக "ரஸிக கொங்ரீட் டிரேடர்ஸ்" (Rasika Concrete Traders) என்ற பெயரில் வியாபாரமொன்றை 2023.09.01ம் திகதி ஆரம்பித்தார். விற்பனை செய்வதற்குத் தேவையான கொங்ரீட் உற்பத்திகளை "சீ/ச. நில்வலா கொங்ரீட் உற்பத்திகள் (தனியார்) கம்பனியிடம் மாத்திரம் ரஸிக உடன்காசு மற்றும் கடனுக்குக் கொள்வனவு செய்தார். விற்பனைக்காகப் பெற்றுக் கொள்ளும் கொங்ரீட் உற்பத்திகளில் பிரதானமாக பூச்சாடியும் மற்றும் கொங்ரீட் கணு உட்படும்.

இந்த வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக ரஸிக ரூ. 1 000 000 காசையும், 800 000 பெறுமதியான தனது சொந்த லொறியையும் ஈடுபடுத்தினார். சிற்றளவு வியாபாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் 2023.09.16ம் திகதி 10% வட்டிக்கு 600 000 பெறுமதியான வங்கிக் கடனொன்றையும் பெற்றுக் கொண்டார்.
2023 செப்டம்பர் மாதம் 1ம் திகதி கொங்ரீட் வேலை சம்பந்தமான அறிவினையுடைய தனது நண்பனான நிமல் என்பவரை ரூ. 45000 மாதாந்தச் சம்பளத்திற்கு இணைத்துக் கொண்டார்.

2023 செப்டம்பர் மாதத்தில் இடம் பெற்ற காசு, கடன் அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் கீழே இடம் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 09/01 | காசுக்கு கொள்வனவு செய்த பொருள் | 800 000 |
| 09/01 | காசுக்கு விற்பனை செய்த பொருள் | 750 000 |
| 09/03 | கடனுக்கு விற்பனை | 500 000 |
| 09/08 | கடனுக்கு கொள்வனவு | 500 000 |
| 09/15 | வாகன பழுதுபார்த்தல் செலவு | 12 500 |
| 09/18 | பெற்றோல் செலவு | 15 000 |
| 09/22 | காசு விற்பனை | 600 000 |
| 09/25 | ஊழியர் சம்பளம் | 45 000 |
| 09/28 | கடனுக்கு கொள்வனவுக்காக காசு செலுத்துதல் | 28 000 |
| | பெற்ற கழிவு | 15 000 |
| 09/29 | உரிமையாளர் காசு பற்று | 25 000 |

❖ வணிகத்தின் செப்டம்பர் மாதத்துக்குரிய மின் கட்டணப் பட்டியல் ரூ. 5000 செப்டம்பர் 30ம் திகதி கிடைத்தது. அதற்கான பணம் செலுத்தப்பட வில்லை.
❖ மோட்டார் வாகனத்திற்கு 12 % பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்ய வேண்டும்.
❖ வியாபாரத்தினை விரிவுபடுத்தும் நோக்கில் கொங்ரீட் உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு தீர்மாணித்ததுடன் அதற்காக இரு இயந்திரங்களையும் இரண்டு ஊழியர்களையும் இணைத்துக் கொள்வதற்கு ரஸிக தீர்மானித்துள்ளார்.
❖ 2023 செப்டம்பர் மாத இருப்பு ரூ 50,000 ஆகும்.

(i) a. "ரஸிக கொங்ரீட் டிரேடர்ஸ்" எந்த வணிக அமைப்புக்கு உட்படும் என்பதனைக் குறிப்பிடுக.
b. மேலுள்ள சம்பவத்திலிருந்து சட்ட ஆளுமை உள்ள வணிக அமைப்பொன்றைக் குறிப்பிடுக.

(ii) a. சந்தைப்படுத்தல் கலவையிலுள்ள உற்பத்திப் பொருள் உள்ளடக்கும் இரு விடயங்களை சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.
b. " ரசிக வியாபார நிலையத்தினைப் பதிவு செய்ய வேண்டும்" என்ற கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா இல்லையா என்பதைக் குறிப்பிட்டு அதற்கான காரணத்தையும் எழுதுக.

(iii) a. ரஸிக வியாபாரத்தின் ''பலம்'' ஒன்றைக் குறிப்பிட்டுக.

b. முகாமைத்துவக் கருமமான திட்டமிடலுக்கு உட்படும் இரண்டு விடயங்களை சம்பவத்திலிருந்து குறிப்பிடுக.

(iv) a. இந்த சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச நிறுவனத்தைக் குறிப்பிடுக.

b. ரசிக தனது வணிக நிறுவனத்தினை சட்ட ஆளுமையுள்ள வணிகமாக மாற்றுவதாயின் பதிவு செய்ய வேண்டிய சட்டம் யாது.

(v) இந்த சம்பவத்தின் அடிப்படையில் 2023.09.01ம் திகதியில் வியாபாரத்தின் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டினைக் குறிப்பிடுக.

(vi) 2023.09.16ம் திகதி இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலின் இரட்டைப்பதிவினை பெறுமானங்களுடன் குறிப்பிடுக.

(vii) a. 2023 செப்டம்பர் மாதத்துக்குரிய மோட்டார் வாகனத்தின் மீதி எவ்வளவு?

b. அதனைப் பதிவு செய்வதற்கான உரிய குறிப்பேடு யாது?

(viii) a. ரசிகவின் வணிகததில் பயன் படுத்தப்படும் மூல ஏடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

b. ரசிகவின் வணிகத்தின் 2023.09.30ம் திகதி கடன் கொடுத்தோரின் தொகையினைக் குறிப்பிடுக.

(ix) ரசிகவின் வணிகத்தின் 2023.09030ந் திகதிக்குரிய காசு மீதியினைக் கணிக்க.

(x) ரசிகவின் வணிகத்தின் 2023.09.30 ம் திகதி தேறிய இலாபத்தினைக் கணிக்க.

(10x2 = 20புள்ளிகள்)

## பகுதி - I வணிகக்கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக)

02. i)a. வணிகம் என்றால் என்ன?

b. வணிகத்திற்கு பொதுவான நோக்கங்கள் உண்டு. அதனை நிறைவேற்றும் போது துணை நோக்கங்கள் மீதுகவனம் செலுத்த வேண்டும் அவ்வாறான துணை நோக்கங்கள் இரண்டினைத் தருக.

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக்குறிப்பிடுக.

அ. உற்பத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் கட்டிடம் உற்பத்திக் காரணியான நிலம் என்பதன் கீழ் உள்ளடக்கப்படும்

ஆ. கல்வி எனும் தேவையை நிறைவேற்றும் நிறுவனங்களில் ஓட்டுனர் பயிற்சிப் பாடசாலையும் ஒன்றாகும்.

இ. சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் பொருள் உற்பத்தி வணிகமாகும்.

ஈ. வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர் அதன் உரிமையாளர் ஆவார்.

iii) தமயந்தி பிரதான வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலை ஒன்றினை சுகாதார முறைக்கமைய நடத்திவருகிறார். அந்தச் சிற்றுண்டிச்சாலையில் உள்ள உணவு வகைகள் பற்றி நோயாளர், நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் வைத்தியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்கள் அதிக விருப்பத்தினைத் தெரிவிக்கின்றனர்.

அ. இச்சம்பவத்தில் குறிப்பிட்டுள்ள வைத்தியசாலைச் சிற்றுண்டிச்சாலை மீது அக்கரை செலுத்தும் இரு பிரிவினரைத் தருக.

ஆ. மேலுள்ள (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவினரும் சிற்றுண்டிச்சாலை மீது அக்கரை செலுத்துவதற்கான காரணங்களை ஒன்று வீதம் குறிப்பிடுக.

இ. அழங்கார வடிவமைப்பு சம்பந்தமான பட்டதாரியான மகேஷ் ஐரோப்பாவிற்கு ஆடை ஏற்றுமதி செய்யும் வியாபாரியாவார். தற்காலத்தில் நிகழும் ரஷ்ய –உக்ரைன் யுத்தம் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் பணவீக்கம் அதிகரித்து ஆடைகளுக்கான கேள்வி குறைந்துள்ளது. அதனால் அவர் அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியை ஆரம்பித்துள்ளார். எனவே வீழ்ச்சியடைந்துள்ள அவரது ஏற்றுமதி வருமானத்தை ஈட்டி வருகிறார் இந்த நிகழ்விலிருந்து மகேஷின் வணிகத்தின்

i) பலம்

ii) அச்சுறுத்தல் களை எழுதுக?

03. i) தொடர்பாடல் செயன்முறையினை வரைபடத்தின் மூலம் விளக்குக.

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக்குறிப்பிடுக.

அ. ஆயுற்காப்புறுதிக்கான இழப்பீட்டுத்தத்துவம் உரிமைத் தத்துவத்தைப் பாதிக்கும்.

ஆ. வணிக வங்கிக்கும் ஏனையவங்கிக்குமான வேறுபாடு நடைமுறைக் கணக்கினைப் பேணுவதாகும்.

இ. மீள் விற்பனை செய்யும் நோக்கில் உற்பத்தி விலையில் கொள்வனவு செய்தவை மொத்த வியாபாரமாகும்.

ஈ. இலங்கையில் நீர்ப்போக்குவரத்து சம்பந்தமாக ஈடுபடுகின்ற நிறுவனமாவது துறைமுக அதிகார சபையாகும்.

iii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள காசோலையில் ABCD எனும் குறியீடுகள் மூலம் (காசோலையின் காந்தமைப்புலப்பகுதியில் MICR) குறிப்பிடப்படும் இலக்கங்களைக் குறிப்பிடுக




iv) கசுன் தனக்குச் சொந்தமான சொகுசு வாகனத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் போது சொகுசு வாகனம் மோட்டார் சைக்கில்லொன்றில் மோதியதால் சொகுசு வாகனமும் மோட்டார் சைக்கிலும் விபத்துக்குள்ளாகியுள்ளன. கசுன் இந்நிகழ்வை தனது சொந்தத் தொலைபேசி மூலம் தான் காப்புறுதி செய்துள்ள இலங்கைக் காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தார். அதன் அடிப்படையில்

அ. காப்புறுதியுடன் தொடர்புடைய பிரிவினரை மேலுள்ள சம்பவத்திலிருந்து ஒழுங்குமுறையில் உதாரணத்துடன் எழுதுக.

ஆ. கசுன் தனது கைத்தொலைபேசி மூலம் பெற்றுக்கொண்ட அழைப்பு உட்படும் ஊடகம் / ஊடகங்களைக் குறிப்பிடுக.

(4x2 = 8புள்ளிகள்)

04. i) சந்தைப்படுத்தல் கலவையின் மாறிகளுள் வியாபாரிக்கு /வியாபாரிகளுக்கு செலவைக் கொண்டுவரும் மாறிகளைக் குறிப்பிடுக.

ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக்குறிப்பிடுக.

அ. வணிக நோக்கம் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் திறனாகும்.

ஆ. மனித தேவைகள், விருப்பங்களைப் பூர்த்திசெய்வதற்காகப் பெறுமானங்களுடன் கூடிய உற்பத்திப் பொருளொன்றை உற்பத்தி செய்து வழங்கும் செயன்முறையே சந்தைப்படுத்தல் எனப்படும்

இ. நுகர்வோர் உற்பத்திப்பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யும் பொழுது முக்கியமான காரணியாக இருப்பது விலையாகும்.

ஈ. குறைந்தளவான வளங்களில் இருந்து ஆகக் கூடுதலான வெளியீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக வளங்களைப் பயன்படுத்துதல் விளைதிறனாகும்.

உ. மனித தேவைகளையும், விருப்பத்தையும் திருப்திப்படுத்தக் கூடிய பெறுமதியுள்ள தயாரிப்புக்களை உற்பத்தி செய்தலும் சேவை வழங்கலுக்குமான செயன்முறை சந்தைப்படுத்தலாகும்.

iii) பாடசாலையின் வணிகதின நிகழ்வின் போது கீழ்வரும் செயற்பாடுகளுக்குப் பொருத்தமான முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக.

அ. வணிக தினத்திற்கான தலைப்பு, நடத்தப்படும் தினம், நேரம், இடம் என்பவற்றைத் தீர்மானித்தல்.

ஆ. வணிக தின நடவடிக்கைகளுக்காகக் குழுக்களை நியமித்தல்.

இ. அந்தந்தக் குழுக்கள் சரியான முறையில் செயற்படுகின்றனவா என்பதைத் தேடியறிதல்.

ஈ. குழுத்தலைவர்கள் மூலம் தமது அங்கத்தவர்களை அந்தந்த செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல்.

iv) யோகட் உற்பத்தி நிறுவனம் தமது யோகட் விற்பனையை அதிகரிப்பதற்காகக ரூ.70 ஆக உள்ள யோகட் ஒன்றை காசுக்கு கொள்வனவு செய்யும் போது ஒன்றின் விலையை ரூ. 5 இனால் குறைத்தும், யோகட் 10 ஐ கொள்வனவு செய்யும் போது, யோகட் 5 இனை இலவசமாகவும் வழங்குகிறது. மேலே குறிப்பிட்ட செயல்கள் இரண்டும் எந்த சந்தைப்படுத்தல் மாறிகளுக்குள் அடங்கும்.

## பகுதி - II கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக)

05. i) செலவு என்பதனை வரை விலக்கணப்படுத்துக. (2புள்ளி)

ii) பின்வரும் இரு கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப் பதிவினைத் தருக.

a. உரிமையாளர் சரக்கிருப்பு பற்று ரூ. 5000

b. வங்கிக்கடனுக்கான தவணைக்கட்டணம் செலுத்தப்பட்டது ரூ. 25,000 (2புள்ளி)

iii) வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| திகதி | சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|---|
| ஒக்டோபர் 1 | அதிகரித்தல்<br>குறைதல் | = | |
| ஒக்டோபர் 2 | அதிகரித்தல் | = | + அதிகரித்தல் |
| ஒக்டோபர் 3 | அதிகரித்தல் | = அதிகரித்தல | |
| ஒக்டோபர் 4 | குறைதல் | = குறைதல் | + குறைதல் |
| ஒக்டோபர் 5 | | = அதிகரித்தல் | + குறைதல் |

மேற்காட்டிய கணக்கீட்டு அட்டவணையில் உள்ள ஒக் 2, ஒக் 3 தினங்களில் நிகழ்ந்துள்ளது என எதிர்பார்க்கும் இரு கொடுக்கல் வாங்கல் வீதமும், ஒக் 4,5 தினங்களில் நிகழ்ந்துள்ளது என தீர்மானிக்கும் ஒரு சாத்தியமான கொடுக்கல் வாங்களையும் எழுதுக.

- விடை எழுதுவதற்காக கீழுள்ள முறையைப் பயன்படுத்துக.
  i) கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு ரூ. 50,000
  ii) ரூ. 50,000 பெறுமதியான தளபாடம் கொள்வனவு (4புள்ளி)

iv) பின்வரும் கொடுக்கல் வாங்கலைப் பொதுக் குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டுக்கு மாற்றுக. (பொதுக்குறிப்பு கைச்சாத்து இல. 1)

2023.10.01 குமார் நிறுவனம் ரூ.200,000 பெறுமதியான தளபாடங்களை தம்ரோ நிறுவனத்திடமிருந்து கடனுக்கக் கொள்வனவு. (4புள்ளி)

06. i) பெரேராவின் வணிகத்தில் 2023 செப்டம்பர் மாதத்தில் இடம் பெற்ற செலவுகள் விபரம் பின்வருமாறு.

| திகதி | விபரம் | காசு (ரூபா) |
|---|---|---|
| 2023.09.01 | கட்டுநிதி மீள்நிரப்பப்பட்டது | 2,500 |
| 2023.09.04 | போக்குவரத்து செலவு | 320 |
| 2023.09.06 | எழுதுகருவி | 260 |
| 2023.09.09 | உட்சுமைக் கூலி | 400 |
| 2023.09.12 | உபசரனைச் செலவு | 300 |
| 2023.09.14 | முச்சக்கரவண்டிக் கட்டணம் | 200 |
| 2023.09.18 | Calculator கொள்வனவு | 600 |
| 2023.09.20 | காபன் தாள் கொள்வனவு | 200 |
| 2023.09.22 | உபசரணைச் செலவு | 150 |
| 2023.09.24 | அன்பளிப்பு | 200 |
| 2023.09.28 | பேனா, பென்சில் வாங்கியது | 150 |

சில்லறைக் காசுக் கட்டுநிதி ரூ. 3000 ஆக இருப்பதுடன் 2023.09.01ம் திகதி மீள்நிரப்பப்பட்டது 2023 ஒக்டோபர் மாதம் 1ம் திகதி கட்டுநிதி மீள்நிரப்பப்பட வேண்டும்.

பிரயாணச்செலவு, எழுதுகருவிச்செலவு, உபகரணைச்செலவு நானாவிதச் செலவுகளைக் கொண்ட பகுப்பாய்வு நிரல்களுடன் கூடிய சில்லறைக் காசேட்டைத் தயாரிக்குக. (4புள்ளி)

ii)

- 2023 செப்டம்பர் மாதம் 30ம் திகதி சமனின் வங்கிக் கணக்கு மீதி ரூ. 50,000 ஆக இருப்பதுடன் அத்திகதியில் வங்கிக் கூற்று மீதி வேறுபட்டுக் காணப்படுகிறது. வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு.
- வைப்புச்செய்தும் தீர்வையாகாத காசோலை ரூ. 10,000
- காசோலைப் புத்தகக் கட்டணம் ரூ. 500, வங்கிக் கட்டணம் ரூ 1000
- நிலையியற் கட்டளைக் கொடுப்பனவு ரூ 5000
- கடன்பட்டோரிடமிருந்து நேரடி வைப்பு ரூ 8000
- வழங்கப்பட்டும் மாற்றப்படாத காசோலை ரூ.7000

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

(a) வங்கிக் கணக்கு மீதியினைச் சீராக்கம் செய்க

(b) 2023.09.30 உள்ளவாறான மீதியை அறிவதற்கு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்க.

(4புள்ளி)

iii) கசுன் வணிகம் 2023.09.30ம் திகதி தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வேறுபடும் ரூ. 2700 தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதற்குக் காரணமான கணக்கீட்டு வழுக்கள் இனங்காணப்பட்டன.

- ரூ. 8500 தொலைபேசிக் கட்டணம் ரூ. 5800 எனப்பதியப்பட்டுள்ளது.
- ரூ. 4000 க்குரிய மின் கட்டணம் முற்றாகப்பதியப்படாது விடப்பட்டுள்ளது.
- ரூ. 6000 கான கொள்வனவுப் பட்டியல் கணக்கேடுகளில் இரு முறை பதியப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது,

(a) மேட்காட்டிய வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(b) தொங்கல் கணக்கினைத் தயாரித்தல்

(4புள்ளி)

07. i) a. வியாபாரக் கணக்கைத் தயாரிப்பதன் நோக்கம் யாது?

b. தேறிய இலாபம் மூலதன கணக்குக்கு மாற்றப்படுவதற்கான இரட்டைப் பதிவினை எழுதுக.

(2புள்ளி)

ii) கீழே உள்ள தகவல்களைப் பயன்படுத்தி ஸதுன் வணிகத்தின் 2023.09.30ம் திகதியில் உரிமையாண்மையைக் கணிக்க.

| | | |
|---|---|---|
| 2023.09.30ம் திகதி - மூலதனம் | ரூ. | 300 000 |
| செப்டம்பர் மாதத்தில் - காசுப் பற்று | ரூ. | 10 000 |
| - சரக்குப் பற்று | ரூ. | 5 000 |
| செப்டம்பர் மாதத்தில் - வருமானம் | ரூ. | 150 000 |
| செப்டம்பர் மாதத்தில் - செலவு | ரூ. | 60 000 |

செப்டம்பர் 25ம் திகதி உரிமையாளரான ஸதுன் வியாபரத்தில் இட்ட மூலதனம் ரூ. 50,000

(2புள்ளி)

iii) ராஜாவின் வணிகத்தின் நிதியாண்டு 2022.01.01ம் திகதி ஆரம்பித்து 2022.12.31ல் முடிவடைவதாகும். அத்தினத்திலுள்ள வணிகத்தின் பரீட்சை மீதி பின்வருமாறு காணப்பட்டது.

| கணக்கின் பெயர் | வரவு ரூ. | செலவு ரூ. |
|---|---|---|
| கொள்வனவு | 500 000 | |
| விற்பனை | | 700 000 |
| கட்டிடம் (கிரயம்) | 400 000 | |
| உபகரணம் (கிரயம்) | 100 000 | |
| உட்சுமைக்கூலி | 10 000 | |
| ஏற்றியிறக்கற் கூலி | 2 000 | |
| கொடுத்தகழிவும் பெற்றகழிவும் | 2 000 | 6 000 |
| காப்புறுதி | 6 000 | |
| விளம்பரச் செலவு | 3 000 | |
| அறவிடமுடியாக் கடன் | 2 000 | |
| மின்கட்டணம் | 5 000 | |
| 15% வங்கிக்கடன் | | 100 000 |
| வங்கிக் கடன் வட்டி | 8 000 | |
| கடன்பட்டோரும் கடன் கொடுத்தோரும் | 25 000 | 30 000 |
| வங்கி மேலதிகப் பற்று | | 10 000 |
| காசு மீதி | 33 000 | |
| 2022.01.01 மூலதனம் | | 300 000 |
| | 1 146 000 | 1 146 000 |

மேலதிகத் தகவல்கள்

- 2022.12.31ந் திகதி இருப்பு ரூ. 20 000
- கடன்பட்டோரில் ரூ. 3000 அறவிடமுடியாக் கடனாக உள்ளது.
- கட்டிடம் மற்றும் உபகரணங்களுக்கு கிரயத்தில் வருடத்திற்கு 10% பெறுமானத் தேய்விடப்பட வேண்டும்.

வேண்டப்படுவது.

1. 2022.12.31ல் முடிவடைந்த வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று. (4புள்ளி)
2. 2022.12.31ல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று (4புள்ளி)


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
T
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න